Source: *Tamil Murasu*, p2
Date: 11 July 2022

# ‘கொரோனா இன்னும் ஒரு வாரத்தில் உச்சம் தொடலாம்’

சிங்கப்பூரில் கொவிட்-19 தொற்றுக்கு ஆளாகுவோரின் எண்ணிக்கை இன்னும் ஒரு வாரத்தில் அல்லது அதற்கு முன்பே உச்சத்தைத் தொட வாய்ப்பு உள்ளதாக இங்குள்ள வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள்.

வாராந்திர தொற்று விகிதம் குறைந்து வருகிறது. அதாவது, கிருமித்தொற்றுவோரின் எண்ணிக்கை மெதுவாக கூடுகிறது.

இதை வைத்து தொற்று குறைந்துவிட்டது என்ற முடிவுக்கு வர முடியாது.

அதேவேளையில், உச்ச தொற்று காலம் நெருங்கி வருகிறது என்று கணிக்க இடம் இருப்பதாக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் அலெக்ஸ் குக் தெரிவித்தார்.

சிங்கப்பூரின் வாராந்திர தொற்று விகிதம் தொடர்ந்து 1க்கும் கொஞ்சம் அதிகமாகவே இருந்து வருகிறது.

இப்படி இருந்தால் புதிய வாராந்திர தொற்று எண்ணிக்கை அதிகரிக்கிறது என்று பொருள்.

அந்த அளவு 1ஐவிட அதிகமாக இருந்தால் உச்சநேரம் நெருங்குகிறது என்று அனுமானிக்கலாம்.

அதற்குப் பிறகு அந்த விகிதம் 1க்கும் குறைய வேண்டும். அப்படி குறைந்தால் தொற்றுவோரின் எண்ணிக்கையும் குறையும்.

நாள் கணக்கில் பார்க்கும்போது ஒரு நாளில் அதிகமாகவும் ஒரு நாளில் குறைவாகவும் புதிய தொற்று இருக்கலாம்.

ஆனால் வாராந்திர தொற்று விகிதம்தான் இதில் முக்கியம் என்று அந்தப் பேராசிரியர் விளக்கினார்.

சிங்கப்பூர் இப்போது பாதுகாப்பு நடைமுறைகள் எதையும் கடுமையாக்காமல் தொற்று அலையைச் சமாளித்து வருகிறது.

இது நம்முடைய மீள்திறனையே காட்டுகிறது என்று தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையின் மூத்த தொற்றுநோய் ஆலோசனை வல்லுநர் பேராசிரியர் டேல் ஃபிஷர் தெரிவித்தார்.

இதனிடையே, எந்தவொரு நடவடிக்கையும் இல்லாமல் கொவிட்-19 அலையை சிங்கப்பூர் சமாளிக்க வேண்டிய தவிர்க்க இயலாத நிலை வரும் என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக பேராசிரியர் டியோ யிக் யிங் தெரிவித்தார்.

இப்போதைய தொற்று அலையை சிங்கப்பூர் முன்புபோல் அல்லாமல் மூன்று முக்கிய வேறுபாடுகளுடன் சமாளித்து வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

சிங்கப்பூர் மக்கள் இப்போது தடுப்பூசியை மட்டுமின்றி பூஸ்டர் ஊசியையும் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

மருத்துவமனைகளும் சமூக நிலையங்களும் நல்ல ஆயத்த நிலையில் இருக்கின்றன.

தங்களுக்கோ தங்கள் குடும்பத்தாருக்கோ கிருமி தொற்றினால் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி பெரும்பாலான மக்களுக்குத் தெரியும் என்றார் பேராசிரியர் டியோ.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.